தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.05

# Human Progress through Thoughts in Ethical Literature

**Dr. K. Chitra***,
Assistant Professor (Tamil), SRM Institute of Science& Technology,
Faculty of Science & Humanities, Ramapuram, Chennai, Tamilnadu, India.
ORCID: https://orcid.org/0000-0002-1026-4048
*Correspondence: kchitraa6@gmail.com.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

## ABSTRACT

This study examines the significance of thoughts and their influence on human life as portrayed in Tamil ethical literature, with particular reference to the Tirukkural. The capacity for rational thinking, which distinguishes human beings from other living organisms, forms the foundation of speech, action, and personality development. The study explores the meaning of the concept of thought (eṇṇam), its literary usage, and its relevance to human life, while highlighting the role of positive thinking in personal growth and progress. Thiruvalluvar regards purity of mind as the highest of all virtues. Through various couplets in the Tirukkural, the study demonstrates that elevated thinking, firm determination, and a motivated mindset guide individuals toward success and excellence. Couplets such as "Manathukkan Maasilan Aathal," "Vellathanaiyathu Malar Neettam Maanthartham Ullathanaiyathu Uyarvu," and "Ulluvathu Ellam Uyarvullal" emphasize the power of thought in shaping human achievement and advancement.

Furthermore, the study analyzes the functioning of thoughts from a psychological perspective by drawing upon Sigmund Freud's theory of the mind. The roles of the conscious mind, preconscious mind, and unconscious mind are examined in relation to human behaviour and development. The paper also highlights Thiruvalluvar's view that mental strength, motivation, and determination are more essential than physical strength for achieving success and growth. Thus, the central argument of this study is that the cultivation and effective implementation of noble thoughts can lead to both individual and social progress.

***KEYWORDS:*** *Thoughts, Tirukkural, Ethical Literature, Mental Well-being, Thinking, Mind, Mental Strength-Motivation- Psychology, Life Philosophy, Human Development, Determination, Thiruvalluvar.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# எண்ணங்கள் வழி மனித குலம் மேம்பட நீதி நூல்கள் தரும் விழுமியங்கள்

* **முனைவர் க.சித்ரா,** உதவிப்பேராசிரியர் (தமிழ்), எஸ்.ஆர்.எம்.அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம், அறிவியல் மற்றும் மானுடவியல் புலம், இராமாபுரம்,சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் நீதி இலக்கியங்களில் குறிப்பாகத் திருக்குறளில் வாழ்வின் முன்னேற்றத்திற்கு எண்ணங்களின் முக்கியத்துவம் குறித்த பதிவுகளை இக்கட்டுரை ஆராய்கிறது. மனிதனைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தும் சிந்தனைத் திறன் அவனது சொல், செயல் மற்றும் ஆளுமை வளர்ச்சிக்கான அடிப்படையாக அமைகிறது. எண்ணம் என்ற சொல்லின் பொருள், இலக்கியப் பயன்பாடு மற்றும் வாழ்வியல் தொடர்புகள் குறித்து விளக்கப்படுவதோடு, மனித வாழ்வின் முன்னேற்றத்தில் நல்ல எண்ணங்களின் பங்கு குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. திருவள்ளுவர் மனத் தூய்மையை அனைத்து அறங்களிலும் உயர்ந்த அறமாகக் கருதுகிறார். மனதில் தோன்றும் உயர்ந்த சிந்தனைகள், உறுதியான நோக்கம் மற்றும் ஊக்கமிக்க மனநிலை ஆகியவை மனிதனை வெற்றியின் பாதைக்கு வழிநடத்துகின்றன என்பதைப் பல திருக்குறள்கள் மூலம் இக்கட்டுரை விளக்குகிறது. “மனத்துக்கண் மாசிலன் ஆதல்”, “வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு”, “உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்” போன்ற குறள்கள் மனித உயர்விற்கும் சாதனைக்கும் எண்ணங்களின் வலிமையை வலியுறுத்துகின்றன.

மேலும், உளவியல் நோக்கில் சிக்மண்ட் பிராய்டின் மனக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எண்ணங்களின் செயல்பாடு ஆராயப்படுகிறது. நனவு மனம், முன் மனம் மற்றும் ஆழ்மனம் ஆகியவற்றின் செயல்பாடுகள் மனித நடத்தை மற்றும் முன்னேற்றத்துடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. மனிதனின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் உடல் வலிமையை விட மனவலிமை, ஊக்கம் மற்றும் மனஉறுதி இன்றியமையாதவை என்பதைத் திருக்குறள் வலியுறுத்துவதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. எனவே, உயர்ந்த எண்ணங்களை வளர்த்துக் கொண்டு அவற்றைச் செயலாக்குவதன் மூலம் தனிமனித மற்றும் சமூக முன்னேற்றத்தை அடைய முடியும் என்பதே இவ்வாய்வின் மையக் கருத்தாகும்.

**திறவுச்சொற்கள் :** (Keywords): எண்ணம் – திருக்குறள்- நீதி இலக்கியம் - மனநலம்-சிந்தனை – உள்ளம் - மனவலிமை, ஊக்கமுடைமை – உளவியல்- அறம் - வாழ்வியல் நெறி - மனித முன்னேற்றம் – மனஉறுதி – திருவள்ளுவர் வழிகாட்டல்.

## முன்னுரை

அறிவு நிலையில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிர்களைப் பாகுபடுத்தி அறிவது தமிழ் வாழிவியல் மரபுகளுள் ஒன்று. ஆறாவது அறிவு வரை எட்டிய ஒரே உயிரினமாக மனித இனம் விளங்குகிறது. ஆறாவது அறிவு என்பது சிந்திக்கும் ஆற்றலை அதாவது எண்ணபுலனைச் சுட்டுகிறது. எனவே பிற உயிர்களிலிருந்து மனிதனை வேறுபடுத்தும் எண்ண ஆற்றல் மிக மிக இன்றியமையாததாக அமைகின்றது. இத்தகைய எண்ணங்களை மேம்படுத்தும் முறைகளைத் திருக்குறள், நாலடியார்உள்ளிட்டநீதி நூல்கள் வழி எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும். நீதி நூல்களுள் உலகப்புகழ்பெற்ற இலக்கியமாகிய திருக்குறள் அனைத்து வழிகளிலும் மனித குலத்தை நன்னெறிப்படுத்த முனைகிறது. தனிமனிதனாக, சமூகத்தின் ஓர் அங்கமாக, நண்பராக, பெற்றோராக, தலைவனாக என அனைத்து நிலைகளிலும் ஒரு மனிதன்சிறந்து விளங்க வழிநடத்தும் ஒப்பற்ற நூல். அந்நூலை முதன்மையாகக் கொண்டு எண்ணங்கள் பற்றிய பதிவுகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## எண்ணம் - சொல் பொருள் உறவு

ஒரு மனிதனின் சொல், செயல் ஆகியவற்றுக்கு மூலமாகவும் முதலாகவும் அமைவது எண்ணங்கள். ‘மனதில் எழும் எண்ணங்களில் கவனமாக இருங்கள்’ என்ற எச்சரிக்கைத் தொடர் நம்மிடையே பரவலாக வழங்குகிறது. மனிதில் எழும் எண்ணம், சிந்தனையாக வளர்ந்து, சித்தம் மற்றும் ஆன்மா நிலைக்கு விரிவடைகிறது. எனவே எண்ணமே அனைத்தின் தொடக்கமாக உள்ளது.

எண்ணம் என்ற சொல் நினைப்பு, நோக்கம், சிந்தனை, நாடிய பொருள் , கருத்து, நம்பிக்கை, ஆலோசனை உள்ளிட்ட பொருள்களில் வழங்குகிறது. மனதில் எழும் ஒரு கருத்து அல்லது நம்பிக்கை போன்றவை எண்ணம் என்ற சொல்லுடன் தொடர்புடையவை. தனிநபரின் அறிவு சார் பார்வை எண்ணம் என்ற சொல்லுடன் நேரடித் தொடர்புடையது என ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். பழந்தமிழ் இலக்கியப் பயன்பாட்டில் முன்னம் என்ற சொல் எண்ணக் குறிப்பை உணர்த்தும் பெயர்ச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. **சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் பேரகராதி (Tamil Lexicon)** “முன்னம்” என்பதற்கு *முன்கருத்து, மனக்குறிப்பு, intention, thought* என்ற பொருள்களைத் தருகிறது.

எண்ணம் கொண்டிருத்தல் என்பதற்கு சொற்பிறப்பியல் அகர முதலி பின்வரும் விளக்கங்களைத் தருகிறது.

1. நோக்கங் கொண்டிருத்தல்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

2. நம்பி எதிர்பார்த்தல்
3. மனத்தில் கனவு காணல்
4. கவலைப்படுதல்
5. சிந்தித்தல்

எண்ணம் என்ற சொல் பின்வரும் பொருட்களில் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளது.

1. நினைப்பு(“எண்ணந்தடுமாறி” - திருவாச.5இ25)
2. கருத்து
3. நாடிய பொருள்( “எண்ணியா ரெண்ண மிழப்பர்- குறள். 494)
4. மதிப்புரவு
5. மதிப்பீடு
6. சூழ்ச்சி
7. கவலை
8. நம்பி எதிர்பார்க்கை
9. எண்ணிக்கை
10. கணக்கு

எண்ணம் என்ற சொல்லை அடியாகக் கொண்டு எண்ணர் என்ற பெயர்ச்சொல் பழந்தமிழ் வழக்கில் இருந்தமையை அறியமுடிகிறது.

1. கணிதர்

“ஏரணங் காணென்ப ரெண்ணர்’ (திருக்கோ. நூற்சிறப்பு. சங்.அக.);.

2. அமைச்சர் (பிங்.)

இச்சொல் கணிதர்களையும் அமைச்சர்களையும் குறிப்பிடப் பயன்பட்டுள்ளது.

<u>மனத்துக்கண் மாசிலன் ஆதல்</u>

மனித சமூகம் மேம்படத் தேவையான அனைத்து நல்லறங்களையும் திருக்குறள் பதிவு செய்கிறது. அறம் பேணுவது இந்நூலின் நோக்கமாக அமையும் நிலையில் அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரம் குறிப்பிடத்தக்கதாக அமைகிறது.

இப்பகுதியில்

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து
அறன் ஆகுல நீர பிற. (குறள். 34)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

என்ற குறள் மனநலனைச் சுட்டுகிறது. ஒவ்வொரு மனிதனும் பேண வேண்டியது மன நலன் மற்றும் உடல் நலன். இவற்றுள் மனநலனைக் குறித்த சிந்தனையை இக்குறள் எழுப்புகிறது. ஒரு மனிதன் மனதளவில் தூய்மை உடையவனாக இருப்பதே அறங்களிலெல்லாம் தலையாய அறம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். செயலில் சிறந்து விளங்க வேண்டுமென்றால் ஒருவன் மனதில் நல்ல எண்ணங்கள் கொண்டவனாக இருக்க வேண்டும்.

மனித குலம் மேம்பட இருவழிகள் பின்பற்றப்படுகின்றன. அவற்றுள் ஒன்று அன்பு வழி மற்றொன்று அறிவு வழி. அறிவு வழி புற உலகின் வளர்ச்சிக்கு உதவுவது. அன்பு வழி மனிதனின் அகத்தைச் செம்மையாக்கவும் சமத்துவமான,நல்லிணக்கமான மனித சமூகம் தழைக்கவும் உதவுகிறது. தொன்மைக் காலம் தொட்டே மனநலன் கொண்ட மனித சமூக வளர்ச்சியையே அறிஞர்கள் போற்றியுள்ளனர்.

'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லையென்போர்க்கு இனன் ஆகிலியர் " - புறம் -29

என்ற புறநானூற்றுப் பாடல் மனநலன் இல்லாதவர் தம் நட்பை விலக்க அறிவுறுத்துகின்றது. நல்லது எது தீயது எது என்று பகுத்தறியும் ஆற்றல் மனிதனுக்கு அவசியம். அத்தகைய ஆற்றல் பெற்ற மனிதன் மனநலனில் சிறந்தவனாகிறான். அத்தகைய நலன் இல்லாதவரிடத்துச் சேரவேண்டாம் என்று இப்பாடல் வலியுறத்துகிறது.சிந்தனைகள் எழும் மனம் என்பது உயிரோடு தொடர்புடையது என்பர்.

“உயிரின் உணர்தலே உள்ளமாம் உயிரின் உணர்தலே உள்ளமாம்”.

என்ற தொடர் இதனை வலியுறுத்துகின்றது. ஆகவே மனநலன் என்பது மிக இன்றியமையாததாக அமைவதோடு ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சிக்கும் உதவுகின்றது. இதனால் மனத்துக்கண் மாசிலனாக இருப்பதை அனைத்து அறன் என்கிறார் வள்ளுவர்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துதல் :**

எண்ணங்களின் வலிமையைப் பதிவிடும் திருக்குறள்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று

“வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர் தம்
உள்ளத்தனையது உயர்வு”(குறள்595)

இத்திருக்குறள் வாழ்வின் மேம்பாட்டிற்கு எண்ணங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. வாழ்வின் உயர்விற்கு உயர்ந்த எண்ணங்களே தொடக்கமாக அமைகின்றது என்ற கருத்தை வலியுறுத்துவதாக இக்குறள் அமைகின்றது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

“எண்ணிய முடிதல் வேண்டும்

நல்லவே எண்ணல் வேண்டும்,

திண்ணிய நெஞ்சம் வேண்டும்”

என்று பாரதியார் எண்ணங்கள் சார்ந்த வேண்டுதலை முன்வைக்கிறார்.“ஒரு மனிதனின் குணத்தைப்பற்றி அறிய அவனுடைய எண்ணங்களையும் செயல்களையும் ஆராய்ந்தால் போதும்.” என்கிறார் உளவியல் அறிஞர் சிக்மண்ட் பிராய்டு. எனவே எண்ணங்கள் ஒரு மனிதனின் செயலுக்குக் காரணமாக அமைந்து பின் அடையாளத்தை உருவாக்கும் வல்லமை கொண்டதாக அமைகின்றது.

**<u>உள்ளியது உள்ளப்பெறல் :</u>**

உள்ளம் என்பது உயர்ந்த சிந்தனைகளுக்கானது. உயர்ந்த சிந்தனைகள் எழும் போது அவற்றில் அனைத்தும் நிறைவேறாது போனாலும் சிந்தித்த அளவேனும் நிறைவேறும் என்கிறார் வள்ளுவர். இதனை கீழ்க்காணும் திருக்குறள் எடுத்துக்காட்டுகிறது.

“உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்று அது

தள்ளினும் தள்ளாமை நீர்த்து” – குறள். 596

உள்ளம் என்ற சொல்லுக்கு மன ஊக்கம் என்ற பொருளை வள்ளுவர் கையாண்டுள்ளார். மன ஊக்கம் என்பது உறுதியுடன் தொடர்புடையது. உறுதி என்பது நல்ல சிந்தனைகளுடன் தொடர்புடையது.வள்ளுவர் இத்தகைய உள்ளம் உடைமையை செல்வத்துடன் ஒப்பிடுகிறார். செல்வம் நிலையில்லாதது ஆனால் இத்தகைய உள்ளம் உடைமை எப்போதும் அழிவில்லாதது என்ற கருத்தை வள்ளுவர் கீழ்க்காணும் குறளில் பதிவிடுகின்றார்.

“உள்ளம் உடைமை உடைமை பொருள் உடைமை

நில்லாது நீங்கிவிடும் “-குறள் 592

மேலும் மனதால் எண்ணும் வாழ்வியல் சார்ந்த நோக்கங்களை அடைவது எளிது என்கிறார் வள்ளுவர். என்ன வளர்ச்சியை அடைய வேண்டும்? என எண்ணுகின்றோமோ அதனை இடைவிடாது சிந்தனையில் கொண்டால் மிக எளிமையாக அதனை அடைந்து விடலாம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

“உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும் தான்

உள்ளியது உள்ளப் பெறின்” - (குறள். 540)

ஆகவே மனித வாழ்வில் எண்ணங்கள் மிக இன்றியமையாத இடம் வகிப்பதை இக்குறள் உணர்த்துகின்றது. உள்ளத்தின் ஆற்றலையும் எண்ணத்தின் வலிமையையும் மேலும்

எடுத்துக்காட்டும் வகையில் மற்றொரு குறளை வள்ளுவர் பதிவிடுகிறார்.

"எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு."- (குறள்467)

துணிச்சலான எண்ணம் ஒரு செயலைத் தொடங்குவதற்கு மிகவும் அவசியம் என்பதை இக்குறள் எடுத்துக்காட்டுகிறது.

**உளவியல் அடிப்படையில் எண்ணங்கள்**

உளவியலின் அடிப்படை ஆய்வு என்பது உள்ளுணர்வு, அறியும் ஆற்றல், கவனம், மன உணர்வு, இயல்பூக்கம், மூளையின் செயல்பாடுகள், ஆளுமை, நடத்தை ஆகியவை தொடர்பான ஆய்வைக் குறிக்கும். (உளவியல் - மேற்கோள்)

புகழ்பெற்ற உளவியலாளர் சிக்மண்ட் பிராய்டின் கருத்துப்படி மனிதனின் எண்ணங்கள் நனவான மனம் (conscious mind) மயக்க மனம்(un conscious mind) மற்றும் முன்-மனம் (sub / pre conscious mind) ஆகிய மூன்று பகுதிகளில் இயங்குகின்றன. நனவான மனம் என்பது சமகாலத்தில் விழிப்புநிலையில் நாம் நினைக்கும் மற்றும் உணரும் எண்ணங்கள் சார்ந்தது. மயக்க மனம் அடக்கப்பட்ட எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகள்சார்ந்தது. முன்-மனம் நனவான மனதிற்கு செல்லக்கூடிய ஆனால் உடனடியாக அல்லாத நினைவுகள் சார்ந்தது. முன் மனத்தில் தேங்கியிருக்கும் உயர்ந்த குறிக்கோள்கள் நிறைவேற நினைக்கும் எண்ணங்கள் இவற்றை செயல்தன்மைக்கு அல்லது நனவான மனத்திற்கு இட்டுச்செல்ல அம்மனத்திற்கு ஊக்கத்தினைக்கொடுக்க வேண்டியது அவசியம். அத்தகைய ஊக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாக திருக்குறளின் ஊக்கமுடைமை அதிகாரத்தினைக் காணமுடிகிறது. முன் மனத்திலிருந்து நனவான மனத்திற்குச் செல்லாத எண்ணங்கள் தேங்கினால் மன அழுத்தம் ஆழ்மனத்தின் பதிவுகள் அதிகரிக்கும். மேலும் நனவு மனம் துடிப்பாக செயல்படும் போது செயல் திறன் அதனால் பெறும் நற்பலன்கள் ஆகியவை அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான பல நல்ல விளைவுகளையும் காணமுடியும். ஒரு மனிதன் நிகழ்காலத்தில் இயங்கவும் நனவு மனத்தில் நின்று செயலாற்றவும் வேண்டியது அவசியம். அது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். வள்ளுவர் நுட்பமாக இச்சிந்தனையை கீழ்க்காணும் குறளில் பதிவு செய்கின்றார்.

"உள்ளம் இல்லாதவர் எய்தார் உலகத்து

வள்ளியம் என்னும் செருக்கு." - குறள். 598.

ஒவ்வொரு மனிதனும் தன்னை உயர்த்திக் கொள்ள தன் எண்ணங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும். ஒருவரின் உயர்வும் தாழ்வும் அவர்தம் எண்ணங்கள் வழி நிகழ்வதால் எண்ணங்களில்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

கவனம் செலுத்த வேண்டும். 'மனம் போல் வாழ்வு' என்ற பொன்மொழி பரவலாக இன்றைய வழக்கில் உள்ளதைக் காணமுகிறது.

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்-நிலையினும்
மேன்மேல் உயர்த்தி நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்."

– வ.உ. சிதம்பரம் பிள்ளை ( மனம் போல வாழ்வு) 1916 ப.21

ஒரு மனிதன் தன்நிலைக்குத் தானே காரணம் ஆகிறான் என்பதை இவ்வரிகள் எடுத்துக்காட்டுகின்றது. ஒரு மனிதனின் எண்ணம் அதன்வழியான செயல்கள் செயல்வழியிலான முன்னேற்றங்கள் என ஒரு மனிதனின் நிலை ஒவ்வொரு படியாக பயணிப்பது தெளிவாகிறது. மேலும் அசைவில்லாத ஊக்கம் உடையவர்கள் அதன் மூலமாகவே பயன்பெறுவர் என்பதைச் சிறப்பாக மற்றொரு குறளில் எடுத்துக்காட்டுகின்றார்.

"ஆக்கம் அதர்வினாய் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை". குறள். 594

அசைவில்லாத ஊக்கம் உடையவர்களின் இடத்திற்கு வழியைத் தேடிக்கொண்டு செல்வம் அல்லது முன்னற்றம் வந்து சேரும் என்பதை மிகத் தெளிவாக இக்குறள் எடுத்துக்காட்டுகிறது.

**உடல் வலிமையும் மன வலிமையும்**

ஒரு மனிதனுக்கு உடல்வலிமையை விட மன வலிமையே மகவும் இன்றியமையாதது என்பதை வள்ளுவர் பல கோணங்களில் எடுத்துக்காட்டியுள்ளார். ஊக்கமுடைய புலியைப் பார்த்த உடலளவில் பெரியதாகிய யானை கூட அஞ்சும் என்றும் ஐம்பொறிகளால் இயங்கும் உடலில் ஏதேனும் குறைகள் இருந்தாலும் அது குறையல்ல மனதில் ஊனம் என்பதே உண்மையில் குறைபாடு என்றும் வள்ளுவர் எடுத்துரைப்பதைக் கீழ்க்காணும் குறளில் காணமுடிகிறது.

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவு அறிந்து
ஆள் வினை இன்மை பழி.- குறள்.618

எவனொருவன் தான் செய்யத் தொடங்குகின்ற செயல் சிறப்பாக அமைய வேண்டும் என்று எண்ணுகிறானோ அவனுடைய வெற்றிக்கு அவனது சிந்தனையும் செயலுமே காரணமாக அமைகின்றன. இது செயலின் வெற்றி மனத்திடத்திலேயே தங்கியுள்ளது என்பதைக் காட்டுகின்றது. (வினோதினி அறிவழகன் -திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள் சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், ப.31) எனவே மனத்திடம் என்பது வளர்ச்சிக்கு மிக

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

அடிப்படையானதாக அமைகின்றது. இதனை உணர்த்தும் வகையில் வள்ளுவர் திருக்குறளில் மன உறுதி இல்லாதவர் மக்கள் அல்ல மரம் என்று குறிப்பிடுகின்றார்.

"உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அது இல்லார்
மரம் மக்கள் ஆதலே வேறு" -கு.600

இக்கருத்தை மேலும் அவர் மற்றொரு சான்றுடன் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றார்.

"பரியது கூர்ங்கேட்டது ஆயினும் யானை
வெறூஉம் புலி தாக் குறின்."- குறள்.599

இக்குறளில் ஊக்கம் கொண்ட ஒரு புலி தாக்க வரும் போது அதனைக் காட்டிலும் பல மடங்கு பெரிதான யானை அஞ்சும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மன ஊக்கம் என்பது உடல் வலிமையைக் காட்டிலும் முக்கியமானது என்பதை இதன் வழி அறியமுடிகின்றது.

**தொகுப்புரை**

நீதி இலக்கியங்களுள் முதன்மையாகத் திகழும் திருக்குறள் இலக்கியம் வழி மனம் எண்ணங்களின் முக்கியத்துவம் குறித்து ஆராய்கையில் வாழ்வியலில் கவனிக்கப்பட வேண்டிய மிக இன்றியமையாத ஒன்று என்பது தெளிவாகின்றது. மனித முயற்சிக்கும் செயல்பாடுகளுக்கும் தூண்டுகோலாக அமையும் கருவி என்பதை அறிய முடிகின்றது. உடல் வலிமையைக் காட்டிலும் மன ஊக்கம் இன்றியமையாததாக வலியுறுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரம், கல்வி, அரசியல் , தொழில் என எந்த வகையிலும் வாழ்வில் உயர்வு என்பது உள்ளத்தனையதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மன உறுதி கொண்ட ஒருவர் மட்டுமே எண்ணியதை எண்ணியாங்கு எய்த முடியும் என்பதை வலியுறுத்துகின்றார். எண்ணங்களில் கவனம் செலுத்தவும் அதனை வலிமைப்படுத்தவும் அதன்வழி செயல்திறனை ஊக்குவிக்கவும் என திருக்குறள் முறையாக மனித முயற்சிக்கு வழிகாட்டுகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1]. அரவாணன், க. ப., தமிழ் இலக்கியச் சமூகவியல்., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2008.

[2]. சாமி சிதம்பரனார்., திருக்குறள் உரை., பூம்புகார் பதிப்பகம், சென்னை. 2009.

[3]. பரிமேலழகர்(உ.ஆ.)., திருக்குறள் மூலமும் உரையும்., சாரதா பதிப்பகம், சென்னை. 2017.

[4]. வித்தியானந்தன், சு., தமிழர் சால்பு., குமரன் புத்தக இல்லம், சென்னை. 2005.

[5]. ஜெகந்நாதன், கி. வா.திருக்குறள் ஆராய்ச்சி உரை., அமுத நிலையம், சென்னை, 2004.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

[6]. வ.உ. சிதம்பரம் பிள்ளை., மனம் போல் வாழ்வு., வ.உ.சி. நூலக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 2016.

[7]. மார்கன், கிளிபோர்ட் டி., உளவியலின் அறிமுகம் (தமிழாக்கம்)., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.

[8]. நார்மன் எல்., உளவியல்: அடிப்படைக் கோட்பாடுகள்., தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை: 2008.

[9]. வினோதினி அறிவழகன்(க.ஆ.) திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள் , சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் , Volume: 7 Issue: 3 January 2023 , E-ISSN: 2582-2810.

[10]. தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon)., சென்னைப் பல்கலைக்கழகம். சென்னை., 1924–1936.

[11]. பேரகரமுதலி., தமிழ்ப் பல்கலைக்கழகம்., தஞ்சாவூர்., 1988.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.